2026 ஜூலை மாதம் 10– ஆம் தேதி வெள்ளிக்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

எம் .சி .ஓ .பி. நெம்பர் : 275/2019

2026–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10– ஆம் தேதி வெள்ளிக்கிழமை மனுதாரர் தரப்பு சாட்சியாகிய PW3 நபரின் வாக்கு மூலம்

(1969–ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.L.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW3 – Dr.E.சுகந்தி |
| தந்தை பெயர்: | பழனிவேல் |
| ஊர்: | திருச்சிராப்பள்ளி |
| வட்டம்: | திருச்சிராப்பள்ளி |
| மாவட்டம்: | திருச்சிராப்பள்ளி |
| தொழில்: | மருத்துவர், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் முதுநிலை மாணவர் |
| வயது : | 37 |

தேதி : 10.07.2026.

முதல் விசாரணை: –

1. நான் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சி ஆஜர். நான் தற்போது திருச்சிராப்பள்ளி, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சைக்கு முதுநிலை படிப்பு படித்து வருகிறேன். 2016 ம் வருடம் நான் தேனி க.விலக்கு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்தேன் என்றால் சரிதான். 14.11.2016 ம் தேதி சதீஷ் என்பவர் தேனி க.விலக்கு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில்

சிகிச்சைக்கு சேர்ந்தாரா என்றால் சேர்ந்தார். அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மையை பதிவு செய்தேன் என்றால் சரிதான்.

2. அவருக்கு எப்படி காயங்கள் ஏற்பட்டன என்று கூறினாரா என்றால் அவர் சுயநினைவில் இல்லை, அவருடன் வந்த ஆதிசெல்வம் என்பவர் சதீஷ் இருசக்கர வாகனத்தில் வந்த போது, பேருந்து மோதி சாலைவிபத்து ஏற்பட்டதாக கூறினார். விபத்து 14.11.2016 ம் தேதி இரவு 10.30 மணிக்கு சுந்தரபாண்டியன் கல்யாண மண்டபம் அருகில் நடந்ததாக கூறினார். நான் அளித்த விபத்து பதிவேட்டின் உண்மை நகல் **ம.சா.ஆ.19** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**</u>:-

எதிர்மனுதாரர் தரப்பிற்கு குறுக்கு விசாரணை செய்ய போதிய அவகாசம் வழங்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்யாததால் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 10.07.2026 அன்று வெள்ளிக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.07.10 18:44:56 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
10.07.2026